**நெல் சந்தைப்படுத்தல் சபை - 2021**

---------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிக்கூற்றுக்கள் தாமதமடைந்த காரணத்தினால் சபை தொடர்பாக கொடுக்கல் வாங்கல் மீதான அறிக்கை 2023 ஜனவரி 18 திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்தவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியின் கலந்துரையாடிய விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான இந்த பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு மேற்கொள்ளும் அடிப்படையில் சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றினை பெற்றுக்கொள்ளும் அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இருப்புக்களை வழங்கும் கொள்கை மற்றும் 20,000 மெட்ரிக் தொன் நெல் ரூபா 880 மில்லியனிற்காக சதொச நிறுவனத்திற்கு வழங்கும் போது திறைசேரி பிணையாக இருந்த எண்ணிக்கை தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 பந்தி 36 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இருப்புக்களை வழங்கும் கொள்கை மற்றும் திறைசேரியில் பிணையாக இருந்த இருப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பந்தி 42 இற்கு இணங்க முன்னைய காலப் பகுதிக்கான தவறுகளை சரி செய்யும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்காமல், முன்னைய ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 336,992,907 தொகைக்கான சீராக்கல்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த உழைப்புக்களில் சீராக்கல் | எதிர் காலத்தில் முன்னைய காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த தவறு ஏற்பட்ட காலப் பகுதிக்கான ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க முன்னை காலப் பகுதிக்கான தவறுகளை சரி செய்யும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடுவதற்கும் மற்றும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன், நியமத்தின் பந்தி 49 இன் பிரகாரம் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பந்தி 51 இற்கு இணங்க சொத்தொன்றின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படுத ஆயுட் காலம் குறைந்த அளவு அனைத்து நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன், எதிர்பார்த்த நிலைமைகள் மதிப்பீடுகளின் மூலம் மாற்றமடையின் அந்த மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டுள்ள 08 தொகுதிகளுக்குரிய 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 84,132,668 தொகை கிரயத்தையுடைய சொத்துக்கள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொண்டு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த ஆண்டுகளில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு முடிந்துள்ள சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட் காலத்தை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 04 வருடங்களை மிகைத்துள்ள முறையே கூட்டுத்தொகை ரூபா 5,685,811,329 தொகைக்கான 19 பெற வேண்டிய வியாபார மீதிகள் காணப்பட்ட போதிலும், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் பந்தி 58 இன் பிரகாரம் அறவீடு செய்தல் நிச்சயமற்ற கடன்பற்றோர் மீதிகளுக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிச்சயமற்ற மீதிகளுக்காக விசேட குழுவொன்று நியமனம் செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அறவீடு செய்தல் நிச்சயமற்ற கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக ஒதுக்கம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையினால் கூட்டுத்தொகை ரூபா 10,459,680 இற்கான தொகையொன்றினை 05 தனியார் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு மற்றும் தனியார் கம்பனியொன்றுக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் சபைக்கு எதிராக 04 நபர்களினால் தொழில் நியாய மன்றில் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் பந்தி 86 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளல் அல்லது நிகழத்தக்க பொறுப்புக்கள் என வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிச்சயமற்ற பொறுப்புக்கள் என மற்றும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறுதி இருப்பினை காட்டும் போது பௌதீக ரீதியாக கணிப்பீடொன்று மேற்கொள்ளாமல் ஏட்டுப் பெறுமதியின் அடிப்படையில் 5,316,218 கிலோ கிராம் நெல்லின் பெறுமதி ரூபா 280,928,112 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பாரிய இருப்பு காணப்படுகின்ற களஞ்சியங்களில் பௌதீக இருப்பு மெய்மையாய்தல் ஒன்று வருடாந்தம் மேற்கொள்ளல் மிகவும் கடினமாக காணப்படுகின்றது எனவும், அதற்காக பௌதீக மற்றும் மனித வளம் போதியளவு காணப்படாமை ஆகிய காரணங்களினால் ஆகும். | இறுதி இருப்பை பௌதீக ரீதியாக மதிப்பாய்வு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2018 பெப்ரவரி முதல் 2021 திசெம்பர் 30 திகதி வரையான காலப் பகுதியில் 501 சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்கு ஒன்றிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 3,805,475 தொகைக்கான வைப்புக்கள் மற்றும் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த இனங்காணப்படாத ரூபா 1,179,892 தொகைக்கான 16 வைப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், ரூபா 2,995,793,781 தொகைக்கான 05 வங்கிக் கணக்குகளுக்குரிய பலவினப் பெறுவனவுகள் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்காத வைப்புக்கள் என 10 வருடங்கள் முதல் 07 மாதங்கள் வரையான காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | இனங்காணப்படாத வைப்புகள் வங்கியின் மூலம் உறுதிப்படுத்தி பற்றுச்சீட்டுகள் வழங்கி காசேட்டில் உட்படுத்துவதற்கும் தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் வெற்றுக் காசோலைகளுக்காக பற்றுச் சீட்டுக்கள் வழங்களாக காணப்படுவதனால் பணிப்பாளர் சபையை அறிவுறுத்தி அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அறவீடு செய்யப்பட வேண்டிய மீதியொன்று காணப்படின் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேர் வைப்புக்கள் மற்றும் ஏனைய இனங்காணப்படாத வைப்புக்களை நேர் வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும், வைப்புச் செய்யப்பட்ட ஆனால் செலவு வைக்கப்படாத வைப்புக்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 02 வங்கிக் கணக்குகளுக்குரிய 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளை உறுதிப்படுத்தலின் படி மீதிகள் முறையே ரூபா 29,806,394 தொகை மற்றும் ரூபா 40,780 தொகை எனினும், காசேட்டின் படி மீதிகள் முறையே ரூபா 34,806,394 மற்றும் ரூபா 25,000 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 4,984,220 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | இரு தடவைகள் காசேட்டில் பதியப்பட்டுள்ள இந்த வரவு வைத்தல்களை சரி செய்வதற்கும், வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை 2022 ஆண்டின் காசேட்டில் உட்படுத்தி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பட்டுள்ள வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது 07 வலைய அலுவலகங்களில் நெற் கொள்வனவு செய்யும் செயற்பாட்டுச் செலவு உட்பட மீண்டுவரும் செலவுகளுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 51,926,299 தொகைக்கான முற்பணங்களுக்கு உரிய தீர்த்தல் சான்றுபடுத்தப்பட்டில்லாததுடன், அந்தப் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலவுகள் மற்றும் பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான நட்டம் மற்றும் பொறுப்பு அந்த எண்ணிக்கையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் முற்பணங்களின் தீர்த்தல் உறுதிச்சீட்டுக்கள் 2022, 2023 ஆண்டுகளில் சான்றுபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் இலாபத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வலைய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களை தீர்த்து சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த மற்றும் சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட 08 மோட்டார் வாகனங்கள் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்துச் சொத்துக்களும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | உலர் பாரத்திற்காக இறுதி நெல் இருப்பில் 03 சதவீதம் அதாவது ரூபா 1,217,126,761 இற்கான ஏற்பாடொன்று 2018 ஆண்டு முதல் செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய செலவுகள் கணக்காய்வில் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | இந்த மீதிகளை தீர்த்துக்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு தகவல்களை கண்டறிந்து குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். | ஏற்பாடுகளுக்குரிய சரியான பயன்பாட்டு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2021 ஆண்டிற்குரிய அனுராதபுர வலைய அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்பு அறிக்கை மற்றும் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்பு அறிக்கைகளை இணக்கம் செய்த போது ஆரம்ப நெல் இருப்பு தொடர்பாக எண்ணிக்கையிடையே 213,749 கிலோ கிராம்கள் மற்றும் பெறுமதிகளிடையே ரூபா 10,751,373 இற்கான வித்தியாசம் ஒன்று நெல் இருப்புக் கொள்வனவு | 2021 ஜனவரி 01 திகதியிலுள்ளவாறு ஆரம்ப மீதியில் தவறு 2022 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கும், பொலிசெக் பொதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 555,480 இற்கான தொகையும் உட்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் தலைமை அலுவலக அறிக்கையின் படி நெல்லின் பெறுமதி மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்தமையால் 192,103 கிலோ கிராம் நெல் | இருப்புக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கும், அவற்றிற்குரிய அட்டவணைகள் மற்றும் ஏடுகளில் உட்படுத்தி எண்ணிக்கைகளுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| செய்தலின் பெறுமதிகளிடையே ரூபா 555,533 இற்கான வித்தியாசம் ஒன்றும், நெல் இருப்பு வழங்குதல் தொடர்பாக எண்ணிக்கையிடையே 192,103 கிலோ கிராமிற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | இற்கான வித்தியாசத்திற்கான தவறினை 2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி (ரூபா) | தொடர்புடைய அறிக்கைகளின் படி பெறுமதி (ரூபா) | வித்தியாசம் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கடன் பட்டோர் (உணவு ஆணையாளர் திணைக்களம்) | 436,543,583 | 347,890,000 | 88,653,583 | உறுதிப்படுத்தப் படாத இந்தக் கடன் பட்டோர் மீதிகள் பல வருட கால பழமையானமையால் மீதிகளை உறுதிப்படுத்தல் பெற்றுக்கொண்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | மீதிகளை உறுதிப்படுத்தல் பெற்றுக்கொண்டு இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடன் பட்டோர் (லங்கா சதொச) | 1,126,323,604 | 1,024,255,120 | 102,068,484 | | |

### 1.5.4 தொங்கல் கணக்குகள்

| | விடயம் | பெறுமதி (ரூபா) | தொங்கல் என காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | தொங்கல் கணக்குகள் | 3,049,830,238 | 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட | தொங்கல் கணக்குகள் மற்றும் வழியில் இருப்பு தொடர்பாக கண்டறிந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு மீதிகளை தாமதமின்றி இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வழியில் இருப்பு | 2,234,953 | 03 வருடங்களுக்கு மிகையான | | |

### 1.5.5 சபையின் இடையறாத உளமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த அண்மித்த 09 வருட காலத்தினுள் சபை ரூபா 462,105,320 தொகையிலிருந்து ரூபா 5,894,325,856 தொகை வரையான வீச்சில் தொடர்ச்சியாக பற்றாக்குறையொன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,385,111,144 தொகை காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டு இறுதியில் மறை உரிமை மூலதன பெறுமதி ரூபா 14,140,932,491 தொகையாக காணப்பட்டதுடன், மொத்த சொத்துக்களை மிகைத்து நீண்ட காலமாக மொத்த பொறுப்புக்கள் காணப்பட்ட காரணத்தினால் உரிமை மூலதனம் தொடர்ந்தும் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக திறைசேரி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளாமல் சபையினை தொடர்ந்து நடாத்திச் செல்லும் இயலுமை நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்டது. இந்த நிலைமையின் மீது சபையின் இடையறாத உளமை ஆபத்து நிலையை அடைந்திருந்த போதிலும், முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | சபையின் இடையறாத உளமை தொடர்பாக முகாமைத்துவத்தினால் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 461,677,824 தொகை மற்றும் 09 செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 65,516,702 இற்காக விரிவான அட்டவணைகளும், கூட்டுத்தொகை ரூபா 1,703,297,369 தொகைக்கான | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் பல வருட காலத்திற்குரிய பழமையான மீதிகளாக காணப்படுவதனால், தீர்த்துக்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமனம் | கணக்கு மீதிகளின் பெறுமதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் பேணிச் செல்லப்பட வேண்டியதுடன், கணக்காய்விற்கும் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 07 பெற வேண்டிய மீதிகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 253,055,091 தொகைக்கான 09 செலுத்த வேண்டிய மீதிகளுக்காக உறுதிப்படுத்தல் ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செய்யப்பட்டு தகவல்களை கண்டறிந்து உரிய சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,096,359,350 தொகைக்காக கடன் கொடுத்தோர் மீதியில் 5 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 6,934,601,287 தொகை, 04 - 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 20,621,251 தொகை, 03 – 04 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 3,629,543 தொகை, 02 – 03 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 33,924,190 தொகை, 01 – 02 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 10,251,678 தொகை காணப்பட்டதுடன், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தீர்க்கப்படாத கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 156,188,191 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதியில் ரூபா 54,226,634 தொகை, 05 வருடங்களை விட மிகையான காலமும், ரூபா 15,948,760 தொகை 02 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலமும், ரூபா 86,012,797 தொகை ஒரு வருடத்திற்கு மிகையான காலமும் பழமையான மீதிகளாக காணப்பட்டதுடன், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் காணப்படும் முற்பணங்கள் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் தீர்த்துக்கொள்வதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்க்கப்படாத முற்பணங்கள் தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 387 | அரச வங்கியொன்றிலிருந்து மேலதிக பற்றுப் பெற்றுக்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ள போதிலும், சபையின் வங்கிக் கணக்கொன்றில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசேட்டில் ரூபா 69,449,720 இற்கான மேலதிக பற்று மீதியொன்று காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சிறந்த நிதி முகாமைத்துவத்தினுாடாக வங்கி மேலதிக பற்று பெற்றுக்கொள்வதை தடுத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 396 | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் மிகைத்துள்ள போதிலும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 3,063,966,570 தொகை பெறுமதியான 83 காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகள் தொடர்பாக நி.பி. 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரகமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டிருந்த நிதிப் பிரமாணம் 756 | 2019 ஆண்டு முதல் கடந்த 05 ஆண்டுகளுக்காக பண்டக் கணிப்பீட்டு சபை நியமம் செய்து அல்லது பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையில் காணப்படும் பதவியணி மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் மற்றும் ஏனைய விசேட காரணங்களின் காரணமாக களஞ்சியங்கள் மற்றும் சொத்துக்களுக்காக வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்து அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) 2017 ஜுன் 28 திகதிய 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் | 2018 ஆண்டு முதல் சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்கள் | சபையினால் அப்பறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் | சொத்துக்கள் தொடர்பாக தகவல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 07 | தொடர்பாக தகவல்கள் கொம்ட்ரொலர் ஜனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | காணப்படாததுடன், கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கொம்ட்ரோலர் ஜனரல் அலுவலத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொம்ட்ரோலர் ஜனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி (2)(i) | சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்காத ஆனால் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 05 வாகனங்களை பதிவு செய்வதற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு முறைப் பிரகாரம் சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | HH – 6041 வாகனம் எதிர் காலத்தில் வாகன அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளும் வரை சபையின் பொறுப்பில் வைத்திருப்பதற்கும், (PG – 1133 வாகனம் வனசீவராசிகள் அமைச்சின் மூலம் திருப்பிப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் தற்காலிகமாக சபைக்கு வழங்கப்பட்டிருந்தது). GD – 2079 வாகனம் வர்த்தக அமைச்சின் மூலம் விவசாய அமைச்சிற்கு சாட்டுதல் செய்த பின்னர் அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்கும், KY – 5290, KY – 7364 வாகனங்களை உரித்தாக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்காத ஆனால் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களை பதிவு செய்து கொள்வதற்கு அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திற்கு முறைப் பிரகாரம் சாட்டுதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2003 ஜூன் 02 திகதிய பீஈடி/12 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | 2017, 2018 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஜூலை 31 திகதி அளவிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2017 மற்றும் 2018 வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2020 ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை விவசாய அமைச்சின் அங்கீகாரம் மற்றும் சான்றுகள் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,385,111,144 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,398,170,883 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 13,059,739 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு வருமானம் ரூபா 2,499,401,268 இனால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனைச் செலவு ரூபா 2,391,484,523 இனால் அதிகரித்தல், நிதிச் செலவுகள் ரூபா 183,132,600 தொகையினால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் அடிப்படைக் குறிக்கோள், நிர்ணய விலைக்கு நெல் விளைச்சலை கொள்வனவு செய்தல் ஊடாக விவசாயிகளின் வறுமையை குறைத்தல் மற்றும் பாதுகாப்பு இருப்பொன்றினை பேணிச் சென்று நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தலாக காணப்பட்ட போதிலும், இதற்காக சபையிடம் 326,710 மெட்ரிக் தொன் கொள்திறனையுடைய 353 களஞ்சியங்கள் காணப்பட்டன. அவ்வாறாயினும், சபையினால் 2021 ஆண்டின் போது ரூபா 2,895,946,648 இற்கான 52,444 மெட்ரிக் தொன் நெல் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இலங்கை மத்திய வங்கி அறிக்கை – 2021 இன் படி ஆண்டின் போது 147,000 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்வதற்கு நேரிட்டதனால், பாதுகாப்பு இருப்பொன்று பேணிச் சென்று உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும், 2025 பெரும் போக இறுதியில் 2025 ஏப்ரல் 10 திகதி அளவில் சபையிடம் காணப்பட்ட மொத்த நெல் இருப்பு 59.6 மெட்ரிக் தொன்கள் மாத்திரம் காணப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக | சபையினால், நெல் கொள்வனவு செய்வதற்கு ஆரம்பித்த போது அனேக பிரதேசங்களில் அரசினால் தீர்மானிக்கப்பட்ட உத்தரவாத விலையை மிகைத்து தனியார் துறையினால் செயற்பட்டிருந்தமையால், சபைக்கு நெல் கிடைக்கும் போக்கொன்று காணப்படவில்லை. உத்தரவாத விலைக்கு அல்லது அதற்கு குறைவான விலைக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு சபைக்கு நேரிடுவதனால், எதிர்பார்த்த நெல் கொள்வனவு செய்யும் இலக்கினை நெருங்குவதற்கு முடியாமல் உள்ளது. | சபையின் அடிப்படைக் குறிக்கோள்களை நெருங்குவதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

பயன்படுத்தப்பட்டிருந்த மொத்தக் களஞ்சியக் கொள்திறன் 0.02 சதவீதம் மாத்திரமாகும்.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 – 2019 காலப் பகுதியினுள் நெல் கொள்வனவு செய்வதற்காக திறைச்சேரியினால் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 10,803,000,000 இற்கான கடன் தொகையில் ரூபா 6,684,554,538 தொகை 2025 ஜூலை 18 திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெற்றுக்கொள்ளும் கடன்தொகையை செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கும், திறைசேரியின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக 2012 முதல் 2019 ஆண்டு வரை இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் மூலம் வழங்கப்பட்டுள்ள இணைந்த கடன் திருப்பிச் செலுத்துவதற்கு சபைக்கு இயலாமல் உள்ளதால், 2020 முதல் 2028 வரையான கடன் தவணை மற்றும் வட்டித் தொகை மற்றும் தாமதக் கட்டணம் மேற்கூறிய வங்கிகளுக்கு செலுத்துவதற்கு திறைசேரிக்கு நேரிட்டிருந்தது. அதன்படி, 2020 முதல் 2025 ஏப்ரல் வரை திறைசேரியினால் சபைக்காக அந்த 02 வங்கிகளுக்கும் ரூபா 12,456,567,732 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2025 மே முதல் 2028 செப்தம்பர் வரை ரூபா 8,438,865,811 தொகை தொடர்ந்தும் செலுத்த வேண்டிக் காணப்படுகின்றது. | 2012 – 2019 ஆகிய ஆண்டுகளின் போது அப்போது காணப்பட்ட அரசாங்கங்களினால் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி சபையினால் நெற் கொள்வனவு செய்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை திருப்பிச் செலுத்தி முடிப்பதற்கு முடியாமல் உள்ளது. அரசினால் விவசாயிகளையும் நுகர்வோரையும் திருப்திப்படுத்தும் முறையில் எடுக்கும் தீர்மானங்கள் காரணமாக சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பு, கொள்வனவு செய்யப்பட்ட விலை, அதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை விட குறைந்த தொகைக்கு அரிசி தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால் பாரிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கடன் தொகையை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்துவதற்கு மற்றும் செயற்திறனுடன் முகாமைத்துவம் செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சிறந்த செலவு முகாமைத்துவமொன்று காணப்படாத காரணத்தினால், சபையினால் இணைந்த கடன் தொகைகளுக்கு மேலதிகமாக பெற்றிருந்த ஏனைய | 2019 / 2020 பெரும் போகத்தில் நெற் சந்தைப்படுத்தும் சபையினால் பெற்றிருந்த கடன் தொகையிலிருந்து சபை மற்றும் மாவட்ட செயலாளர் ஊடாக நெல் இருப்பு கொள்வனவு செய்யப்பட்டு அரிசாக மாற்றப்பட்டு | கடன் தவணை மற்றும் வட்டி உரியவாறு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்களுக்காக செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணம் வட்டி உரியவாறு செலுத்தாமையால், 2021 மார்ச் 23 திகதி ரூபா 1,244,147 இற்கான தாமதத் தண்டக் கட்டணமொன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது. அங்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையின் பகுதியொன்று மாவட்ட செயலாளரினால், அந்த ஆண்டிலேயே தீர்க்கப்பட்டிருந்ததுடன், மீதிப் பணம் விற்பனை மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் பணம் கிடைப்பதில் தாமதம் மற்றும் சபையின் நெல் இருப்பினை அரிசாக மாற்றி சிறப்புச் சந்தைகளில் கடனுக்கு விற்பனை செய்வதன் மூலம் பெற வேண்டிய பணம் பெற்றுக்கொள்வதில் தாமதமடைந்த காரணத்தினால் கடன் தொகைக்குரிய வட்டித் தொகை உரிய தினத்தில் செலுத்துவதற்கு முடியாமல் போனது. | |
| (ஈ) | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்களிடம் கிடைத்த தகவல்களின் படி சபையின் தலைவரின் பெயரில் 44 மோட்டார் வாகனங்களும், பொது முகாமையாளரின் பெயரில் 04 வாகனங்களும் சபையின் பெயரில் மற்றும் அந்த முகவரியின் கீழ் 10 மோட்டார் வாகனங்களும் 08 முச்சக்கர வண்டிகளும், 32 மோட்டார் சைக்கில்களுமாக பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்களின் 98 வாகனங்கள் சபையில் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | 2012 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கள உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்படுகின்ற 08 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான தகவல்கள் மாத்திரம் நிறுவனத்தில் காணப்படுகின்றது. உதவி பிரதேச முகாமையாளர்களுக்காக வட்டி இன்றிய கடன் திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை வாகனத்தின் உரிமை சபையின் பெயரில் காணப்படுகின்றதென நிபந்தனையின் மீது 30 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் 02 மோட்டார் சைக்கிள்களுக்காக கொடுப்பனவை பூர்த்தி செய்திருக்காமையால் உரிமையை சாட்டியிருக்காததுடன், ஒரு உத்தியோகத்தரினால் சாட்டுதல் ஆவணங்களை ஒப்புக்கொண்டிருந்த போதிலும், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தினால் உரித்தாக்கியிருக்கவில்லை. மற்றும் 05 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக சபையின் உரிமையை உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அனைத்து மோட்டார் சைக்கிள்களும் அந்த உத்தியோகத்தர்களிடம் காணப்படுவதுடன், சபையின் பெயரில், சபையின் பொது முகாமையாளரின் பெயரில் அல்லது சபையின் | சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பாக கண்டறிந்து சபைக்கு சொந்தமல்லாத வாகனங்கள் குறிப்பிட்ட தரப்பினருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முகவரியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பாக தகவல்கள் நிறுவனத்தில் காணப்படவில்லை. | |
| (உ) | மீளாய்வாண்டில் 03 மாதங்களின் விற்பனையை தெரிவுப் பரிசோதனையின் போது 03 நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 819,570,580 தொகைக்கான கடன் விற்பனவு குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுடன் உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்காததுடன், மேலும், 04 நிறுவனங்கள் தொடர்பாக காணப்படுகின்ற உடன்படிக்கைகள் நீடிக்கப்படாமல் விற்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டு தொடர்பாக உடன்படிக்கைகளின் பிரகாரம் அடுத்த வருடங்களிலும் அரிசி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் எதிர் காலத்தில் இந்தக் கருமங்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் விற்பனைகள் தொடர்பாக உடன்படிக்கைகளுக்கு அணுக வேண்டியதுடன், அந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 03 வருட கால தாமதத்துடன் 2025 மார்ச் 18 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஜூலை 31 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |